தலைவர்

அன்புடைய பங்குதாரர்களே,

HNB Assurance PLC வரிக்கும் பின்னரான ரூபா 1,175 மில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கும் அதே நேரம் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையையும் சமர்ப்பிக்கிறேன். 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறித்த இலாபம் 16% அதிகரிப்பு ஒன்றைக் காட்டுகிறது. HNB Assurance PLC இன் 19 ஆம் வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு உங்களை வரவேற்கும் இத்தருணத்தில் திடீரென்று ஏற்பட்ட பாரிய மாற்றங்களும் அவற்றின் போது மாறிலியாக இருந்த சில அடிப்படைகளும் எனது ஞாபகத்திற்கு வருகிறது. நாம் எவ்வாறு வாழ்கிறோம், உழைக்கிறோம், அனுபவங்கள் மூலம் கற்றுக் கொள்கிறோம் போன்ற காரணிகள் மாற்றமடைந்தன் காரணமாக பூகோள வழங்கல் சங்கிலி பாதிக்கப்பட்டதுடன் அவை பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்களை முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு ஏற்படுத்தின. இத்தகைய சூழ்நிலையில் மனித உயிருக்கான பெறுமதி, ஊடாடத்துக்கான அடிப்படைத் தேவை, நம்பிக்கை நம்பகத்தன்மை மற்றும் மாற்றங்களுக்கு முகம் கொடுத்து புத்தாக்கங்களை உருவாக்குவதற்கான இயலுமை போன்ற அம்சங்கள் மாறிலியாக காணப்பட்டன. அவை உறுதியான தாக்குப் பிடிக்கும் ஒரு நிறுவனத்தின் ஆக்கக் கூறுகளாகும். இந்த வருடத்தின் ஆண்டறிக்கையின் கருப்பொருளும் இந்த விடயங்களையே பிரதிபலிக்கின்றன.

**ஒரு புதிய நிலை**

எனது முந்திய செய்தியில் ''நிச்சயமற்ற நிலைமையே சாதாரண நிலைமையாக மாறியுள்ளது'' என்று நான் குறிப்பிட்டிருந்தாலும் கூட 2020 இல் ஏற்படப் போகின்ற மாற்றங்களின் அளவை கற்பனை செய்து பார்ப்பதற்குக் கூட கடினமாக இருந்தது. தலைப்புச் செய்தியாக ஆதிக்கம் செலுத்திய அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான விரிசல், Brexit போன்ற அரசியல் விவகாரங்கள் முக்கியத்துவத்தை இழந்ததுடன் கோவிட் தொற்று காரணமாக ஏற்படப் போகும் மனிதாபிமான மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பான பரந்தளவிலான கரிசனை முக்கிய செய்தியாக மாறியது. உலக பொருளாதார வளர்ச்சி 3.5% (சர்வதேச நாணய நிதியம் - IMF ) சுருங்கியதாலும் 2019 இல் நெருக்கடிக்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும் போது சர்வதேச தொழில் அமைப்பின் மதிப்பீட்டின் பிரகாரம் 2020 இல் அண்ணளவாக 114 மில்லியன் தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போனதாலும் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உலக நிலைமை சாதகமாக மாறும் என்ற எதிர்பார்ப்பு ஏமாற்றத்தைத் தந்தது. கேள்வி–வழங்கல் நிலைமை மாற்றங்களினாலும் ஏற்பாட்டியல் காரணமாகவும்

உலக வழங்கல் சங்கிலி பாதிக்கப்பட்டதன் விளைவாக உலக வர்த்தகம் 9.2% சுருங்கியது. அரசாங்கம் நிலைமைகளைப் புரிந்து அவற்றிற்கு ஏற்றவாறு தயாரிப்புகளை மேற்கொண்டதாலும் கொள்கை வகுப்பு மூலம் முன்னொரு போதும் இல்லாதவாறு ஒத்துழைப்பை வழங்கியதாலும் ஏற்படவிருந்த மோசமான நிலை தடுக்கப்பட்டது. இதன் காரணமாக வட்டி வீதங்கள் என்றும் இல்லாதவாறு வீழ்ச்சியடைந்ததுடன் அவை 2021 வரையில் அவ்வாறு இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தடுப்பூசிகள் மற்றும் சிகிச்சை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிகச் சாதகமான விளைவுகளாகும். 2021 இல் தடுப்பூசி வழங்குவதற்கான திட்டம் சாதகமான புதிய நிலைமையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதாரமும் கோவிட் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டதுடன் 2020 இல் 3.9% எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டியது. இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் பலமான நடவடிக்கைகளும், அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளும் அதே நேரம் புலம்பெயர் தொழிலாளர்களின் காசு அனுப்பல்களின் வளர்ச்சி காரணமாகவும் செம்மதி நிலுவை துண்டு விழும் தொகையை US$ 2 பில்லியன்களால் குறைக்க முடிந்துள்ளது. எனினும், இலங்கை ரூபா நிலையற்ற தன்மையில் காணப்பட்டதுடன் 2020 ஏப்பிரல் மாதம் டொலருக்கு எதிராக ரூபா 200.47 ஆக இருந்ததுடன் வருட முடிவில் 189.18 ஆகவும் இருந்தது. வியாபார தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஏற்பாடுகள் இல்லாதிருந்த போதும் இலங்கை மத்திய வங்கி 4% வட்டி அடிப்படையில் வியாபார தொழில் முயற்சிகளுக்கு ரூபா 178 பில்லியனுக்கும் அதிகமான நிதியுதவிகளை அளிப்பதற்கு ஊக்குவிப்பு பொதியொன்றை ஒன்றை அறிமுகப்படுத்தியமை மோசமாக பாதிக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பாதுகாத்தது. மூலதனம் மற்றும் வட்டி மீள செலுத்தல்களுக்கான 2021 மார்ச் 31 வரையான கால நீடிப்பு வியாபார முயற்சிகளுக்கு வழங்கப்பட்டது.

கடன் மீளச் செலுத்தும் இயலுமை அடிப்படையில் இலங்கை, தரப்படுத்தலில் கீழ் மட்டத்துக்கு தள்ளப்பட்டதானது பிரச்சினையை மேலும் அதிகப்படுத்தியதுடன் குறித்த நிலைமையானது கட்டமைப்பு ரீதியில் சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. முன்னொரு போதும் இல்லாதவாறு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள காலப் பகுதியொன்றில் வட்டி மற்றும் மூலதன மீளச் செலுத்தல், மற்றும் வரவு செலவுத் திட்ட துண்டு விழும் தொகை ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து 2021 ஆம் ஆண்டு பொருளாதாரத்தின் மீது பாதிப்புச் செலுத்தும் என்று எதிர்பாரக்கப்படுகிறது.

**அதிகரித்து வரும் சவால்கள்**

இந்த வருடத்தின் நிச்சயமற்ற நிலையிலும் எமது செயலாற்றுகை, நாம் எவ்வாறு அதிகரித்து வரும் சவால்களை வெற்றி கொண்டுள்ளோம் என்பதற்குச் சான்றாகும். காப்புறுதி அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் சேவையை வழங்குவதற்காக எமது ஊழியர்களின் பாதுகாப்பையும், உடல் நலத்தையும் பேணுவது எமது முன்னுரிமையாக இருந்தது. வாடிக்கையாளர்களை நேரடியாக சந்திப்பது ஒரு அபாய நிலையை ஏற்படுத்தும் என்பதால் நிர்வாக ரீதியில் பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டதுடன் முடிந்தளவு டிஜிடல் முறையில் பணிகளை மேற்கொள்வதற்கும் வழி வகுத்து, நிலைமைகளை சீர்படுத்தினோம். நாங்கள் எவ்வாறு தீர்வுகளை கண்டறிந்தோம் என்பதற்கான எமது முதலாவது இணைய வழியான வருடாந்த பொதுக் கூட்டம் ஓர் உதாரணமாகும். அனைத்து முதலீட்டாளர்களுக்கும் இணைய வழியாக கலந்து கொண்டு வாக்களிக்கவும் வாய்ப்பளித்தோம்.

முகம் கொடுத்து வந்த சவால்களுக்கு மத்தியில் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக நிறுவனம் மேற்கொண்ட மற்றுமொரு முன்னெடுப்பாக நிறுவனம் பூராகவும் செலவுகளை கவனமாக மேற்கொள்வதற்கான மேற்பார்வை நடைமுறையைக் குறிப்பிடலாம். இந்த செயற்திட்டத்தின் கீழ் நடப்பு வருடத்தில் நாம் ரூபா 21 மில்லியனை சேமித்துள்ளதுடன் 2021 இல் மேலும் ரூபா 43 மில்லியனை சேமிக்க எதிர்பார்க்கிறோம்.

நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மையை பேணும் குறிக்கோளுடன் பணிப்பாளர் சபை அதன் மேற்பார்வையை தீவிரப்படுத்தி குழுவுடன் நெருக்கமாக செயற்பட்டது. வியாபார திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை கூர்ந்து கண்காணிக்கும் அதே நேரம் சபை உபகுழு விசேடமாக இடர் நேர்வு முகாமை மற்றும் மூலோபாய மீளாய்வுக் குழுக்கள் வியாபார சூழ்நிலைகளுடன் தொடர்பான சவால்களையும் இடர்நேர்வுகளையும் வெற்றி கொள்வதற்காக, பரிகார நடவடிக்கைகள் தொடர்பாக, விதப்புரைகளை மேற்கொண்டு அவற்றை கூர்ந்து கண்காணிக்கும் வகிபாகத்தையும் வகித்தது.

நிறுவனம் எதிர்நோக்கிய ஏனைய சவால்கள் பிரதானமாக பொருளாதார காரணிகளாலும் மற்றும் அவற்றுடன் தொடர்பான கொள்கை சார்ந்த விடயங்கள் காரணமாகவும் தோன்றியனவாகும். வட்டி வீதம் வீழ்ச்சியடைந்ததனால் எமது முதலீட்டு வருமானம் மற்றும் ஆயுள் காப்புறுதி மூலம் ஈட்டும் இலாபம் 2020 இல் பாதிக்கப்பட்டமை இந்த சவால்களில் உள்ளடங்கும். இறக்குமதி கட்டுப்பாடு காரணமாக மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமையும் உதரிப் பாகங்களின் விலையேற்றமும் அடுத்த குறிப்பிடத்தக்க

சவாலாக அமைந்தது. சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற சமூகக் காரணிகள் புதிய வாடிக்கையாளர்களை சந்தித்து கலந்துரையாடல்களை எமது ஆலோசகர்களுக்கு மேற்கொள்வதற்கு தடையேற்படுத்தியதால் அது மேலதிக அழுத்தத்தை மொத்த புறழ்வில் ஏற்படுத்தியது.

**கூட்டு உடன்படிக்கைகளை பேணுதல்**

கோவிட்-19 முதலாவது அலையின் போது, ஊழியர்களின் ஊதியம் மற்றும் அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் குறைக்கப்பட மாட்டாது என்று நாம் அவர்களுக்கு வழங்கிய உறுதிமொழியானது கூட்டாண்மை இலக்குகளை அடைவதற்குத் தேவையான ஸ்திரத்தன்மையை வழங்கியது. இந்த உறுதிமொழியின் பயனாக எமது ஊழியப் படைக்கு சம்பள அதிகரிப்பும் சலுகைகளும் (bonus) மற்றும் ஏனைய நலன்களும் திட்டமிட்டவாறு வழங்கப்பட்டது. இந்த அறிக்கை அவர்களின் திறமைமிக்க செயலாற்றுகையை குறித்துக் காட்டுகிறது.

இவ்வருடத்தில் "தொழில் புரிவதற்கு சிறந்த இடம் (Great Place to work)" சான்றிதழை பெற்றுக் கொண்ட 40 நிறுவனங்களில் ஒன்றாக HNBA Group காணப்படுகிறது. இந்தச் சான்றிதழ் எமது நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பரஸ்பர அர்ப்பணிப்புக்கு சான்றாக விளங்கி எமது முன்னேற்றத்தையும் உறுதி செய்தது.

முதலாவது முடக்க நிலையின் போது (Lockdown) HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டும் காப்புறுதியாளர்களுக்கு (Policy holders) தவணைக் கட்டணங்களை வழங்குவதற்காக நீடிக்கப்பட்ட சலுகைக் காலத்தை வழங்கி நிவாரணம் வழங்கியது. இந்த சலுகை காலத்திலும் எமது ஈட்டுறுதியாளர்களின் அனைத்து காப்புறுதிப் பணம் கோரல்களையும் (Insurance claims), நலன்களையும் வழங்கியமை அவர்களுக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம் என்பதற்கான சான்றாகும்.

**அதிக பெறுமதியை அளித்தல்**

முடக்கம் (Lockdown) மற்றும் அதனைத் தொடர்ந்து எமது கிளைகளை சிலபோது மூடவேண்டி ஏற்பட்ட நிலைமைகள் போன்ற வியபாரத்தை பாதிக்கக்கூடிய பின்னணியிலும் எமது மொத்த வருமானம் கடந்த வருடம் 5% வளர்ச்சியடைந்தது. எமது ஊழியர்படை ஒன்றாக இணைந்து சிரமம் பாராது செயற்பட்டு கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் உச்ச வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தியது. புத்தாக்கங்கள் எமது வளர்ச்சிக்கு வசதியளித்தன. HNBA மூலமான Supreme Health Max மற்றும் Super Critical illness மற்றும் HNBGI மூலமான Pay As You Claim

போன்ற காப்புறுதித் திட்டங்கள் நீண்ட காலமாக உணரப்பட்டு வந்த சந்தையின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளன. எமது மொத்த சொத்துக்களும் தேறிய சொத்துக்களும் முறையே 19% மற்றும் 22% வளர்ச்சியடைந்து ரூபா 31.7 பில்லியன் மற்றும் ரூபா 8.2 பில்லியன் வரை அதிகரித்துள்ளன.

எமது செயலாற்றுகையை பாதிக்கக் கூடிய இடர்நேர் காரணிகள் மீதான ஆழ்ந்த கரிசனையுடன் வட்டி வருமானம் குறைந்ததன் காரணமாக ஏற்பட்ட அழுத்தத்தை சிறந்த முறையில் அதிகரித்தும் முகாமை செய்தோம். எனினும் இவ்வாறிருந்தும் எமது மொத்த வருமானம் 6% கூட ஆயுள் நிதியின் பெறுமதி குறைந்த வட்டி வீதங்களில் கணிக்கப்பட்டதனால் HNBA இன் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்பட்டதுடன் 2020இல் எமது வருமானம் மட்டுப்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் HNBA Group இன் வருமானம் 16% உயர்ந்து ரூபா 1,175 மில்லியன் ஈட்டப்பட்டது. உற்பத்தித் திறன் மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் சிறந்த இடர்நேர் முகாமையின் விளைவாக இது ஏற்பட்டது.
பல வருடங்களாக, எமது பதியப்பட்ட பங்குதாரர்களுக்கு தொடர்ச்சியான வளர்ச்சியின் செயலாற்றுகையையும் பயன்களையும் வழங்கி வருவதற்கு மேலதிகமாக நவம்பர் மாதத்தில் நாம் அறிவித்த எமது முடிவின் பிரகாரம் சாதாரண பங்கு ஒன்றை மூன்று சாதாரண பங்குளாக பிரிக்கப்பட்டதானது எமது பங்குதாரர்கள் இந்த வருடத்தில் பெற்றுக் கொண்ட மிகவும் கவர்ச்சியான பயனாகும். அதன் மூலம் நிறுவனத்திலுள்ள அவர்களின் முதலீட்டின் பெறுமதியை அதிகரிக்க (unlock value) முடிந்துள்ளது. இந்த தீர்மானத்தின் விளைவாக எமது பங்குகளின் செயலாற்றுகையும் (Performance) அவற்றுக்கான கேள்வியும் கணிசமான அளவு அதிகரித்தது.

மொத்த பங்குகளின் பெறுமதி ரூபா 6.9 பில்லியனிலிருந்து ரூபா 8.7 பில்லியனாக மாறியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 27% வளர்ச்சியை அடைந்துள்ளது. பங்குகளின் மொத்த புறழ்வு 56% அதிகரித்ததுடன; “ஹசு (HASU)” சந்தை தினங்களில் 97.6% விற்பனையானது. மேலும், சபை பங்கு ஒன்றிற்கு ஓர் இடைக்கால மற்றும் இறுதி பங்கிலாபமாக ரூபா 2.80ஐ உங்கள் அங்கீகாரத்துக்காக விதந்துரைத்துள்ளது. கூட்டத்தின் முன் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது மொத்தமாக ரூபா 420 பில்லியன் பங்கிலாபத்தை உள்ளடக்கும்.

நிதி ஸ்திரத்தன்மையை பேணுவது மிகவும் முக்கியமான முன்னுரிமையாக காணப்பட்டதுடன் 2019 இல் HNBA மற்றும் HNBGI ஆகிய இரண்டு நிறுவனங்களினதும் மூலதன போதுமை சதவீதம் முறையே 309% மற்றும் 223% ஆக

இருந்ததுடன் அவை 2020 இல் 338% மற்றும் 256% ஆக அதிகரித்துள்ளதைச் சுட்டிக் காட்டவும் விரும்புகின்றேன். எதிர்பாராத கேள்வி தொடர்பாக கூர்ந்து அவதானிக்கப்பட்டது. நிகழ்வுகளை இனங்கண்டு முறியடிப்பதற்காக, Fitch தரப்படுத்தல் நிறுவனம் (Fitch Ratings Lanka Ltd) வியாபார சூழலில் உள்ள சடுதியான மாற்றத்தைக் காண்பிப்பதற்காக எதிர்கால நிலைமை பற்றிய கண்ணோட்டத்தை சாதகம் என்ற நிலையில் இருந்து நிலையானது என்ற நிலைக்கு மாற்றினாலும் HNBA மற்றும் HNBGI அவற்றின் தரப்படுத்தலை A lka தரத்தில் வைத்திருந்தது. நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்து வளர்ச்சியையும் உற்பத்தித் திறனையும் உறுதி செய்வதில் இன்றியமையாத ஒரு காரணியாக எமது தாய் நிறுவனமான HNB PLC இருக்கிறது.

திட்டமிடப்பட்ட சனசமுதாய செயற்திட்டங்களை பூர்த்தி செய்தமைக்காக HNBA குழுவுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். குடிநீர் வசதிகளை வழங்குவதற்காக திட்டமிட்டிருந்த 6 செயற்திட்டங்களை முன்னெடுத்ததுடன் இலங்கை கேள்விப் புலனற்றோர் கிரிகட் அணிக்காக எமது அனுசரணையைத் தொடர்ந்தும் வழங்கிவந்தோம். சமுதாய மருத்துவர் கல்லூரிக்கு (College of Community Physicians) மருத்துவம் தொடர்பான கட்டுரைகளை வெளியிடுவதற்கும் உடல்நலம் தொடர்பான கருத்தரங்குகளை மேற்கொள்வதற்கும் HNBA அனுசரணை வழங்கியது.

**எதிர்கால நிலைமை பற்றிய கண்ணோட்டம்**

தடுப்பூசி வழங்கப்பட ஆரம்பித்ததுடன் நாங்கள் வருடத்தை சாதகமான மனப்பாங்குடனும் ஆரம்பித்தோம். தற்போது முன்னிலையில் இருந்து தொழிற்படும் ஆட்களுக்கு இந்த தடுப்பூசி வழங்கப்பட்டுவருகிறது. புதிய வைரஸ் உருவாகியுள்ளதாலும், உலகம் முழுவதும் புதிய அலைகள் தோற்றம் பெற்று வருவதாலும் சாதாரண நிலைமைக்கு மீளுவதற்கு காலம் எடுக்கும் என்ற அச்சம் உள்ளதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். சர்வதேச நாணய நிதியின் (IMF) 2020 ஒக்டோபர் எதிர்வு கூறலுக்கு 0.3% உயர்வுடன் அதன் 2021 சனவரி மாதத்துக்கான உலக வளர்ச்சியை 5.5% திருத்தியுள்ளதாவது இந்த சாதக நிலைமையினையே எடுத்துக் காட்டுகிறது. சாதாரண நிலைமைக்கு மீளுவதற்கான பலவகையான வழிவகைகள் மருத்துவ உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் கொள்கை சார்ந்த ஒத்துழைப்புக்களின் பயனுறுதித் தன்மை, நாடளாவிய ரீதியில் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் கட்டமைப்பு ரீதியிலான அம்சங்கள் உலக பொருளாதார நெருக்கடிக்குள் நுழைவது போன்ற விடயங்களில் தங்கியுள்ளன என்று

IMF எச்சரிக்கிறது. ஆகவே இலங்கையும் இந்த விடயங்களில் கருத்தில் கொள்வது 2021 ஆண்டுக்கான அதன் நிலையை மதிப்பிடுவதற்கு உதவும். தற்போது நிதிக் கொள்கை நெகிழ்வுத் தன்மையில் உள்ளதால் கட்டமைப்பு ரீதியான விடயங்கள் தீர்மானமிக்க காரணிகளாக இருக்கும். தேவையான போது எமது மூலோபாயத்தை சரி செய்வதற்காக மேற்படி காரணிகள் தொடர்பாக நாங்கள் அவதானிப்புடன் இருப்போம்.

நாங்கள் புதிய நிலைமையை எதிர்கொள்ள தயாராகும் போது HNBA வளர்ச்சியை சமநிலைப்படுத்தக் கூடிய தொழில்நுட்பத்துக்கான திட்டங்களை வகுத்துள்ளது. பல்லின உற்பத்திகளின் வரிசை ஊக்கத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன் Pay as You Claim காப்புறுதித் திட்டம் காப்புறுதிச் சந்தையை மாற்றுவதற்கு உதவியாக 2021 இல் வளர்ச்சியை உந்தச் செய்யும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். சந்தையின் பாதுகாப்பு வலையை பலப்படுத்துவதாகவும் இது அமையும்.
2021 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட உந்துதலைப் பயன்படுத்தி நாங்கள் தொடர்ந்தும் எமது செயற்பாடுகளையும் முறைமைகளையும் ஏற்படத்துவோம். வளர்ச்சியையும் உற்பத்தித் திறனையும் ஏற்படுத்தும் புதிய முறைமைகளை 2021 இல் HNBGI நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. கணக்கீட்டு நியமம் SLFRS-17 காப்புறுதித் துறையில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுவதால் 2023 சனவரி 1 ஆம் திகதியில் அது வலுவுக்கு வந்ததும் அதனை காப்புறுதி ஒப்பந்தங்களில் பின்பற்றுவதற்கும் அவதானத்தை செலுத்தியுள்ளோம். தற்போது செயற்பாடுகள் ஸ்திரத்தன்மையை அடைந்திருந்தாலும் 2021 ஆம் ஆண்டின் போது ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் பற்றிய அறிகுறிகள் தொடர்பான சபை அவதானிப்புடன் உள்ளது.

**பாராட்டு**

இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெறுபேறுகளை அடைவதற்காக எமது இளம் சுறுசுறுப்பான குழு தனது கடமைக்கு அப்பால் சென்று செயற்பட்டதற்காக நன்றியைத் தெரிவிப்பதற்கு நானும் பணிப்பாளர் சபையும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறோம். கடமைக்கு சமுகமளிப்பது ஒவ்வொரு நாளும் சவாலாக இருந்தமையும் மேலும் குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் தொடர்பாக பிரச்சினை எழுந்த போது மன உழைச்சலுக்கு ஆளானதையும் நாங்கள் அறிவோம்.

HNBA மற்றும் HNBGI குழுவினர் எல்லையற்ற கனவுகளை கண்டு அவற்றை நனவாக மாற்றுவதற்கு தொடர்ந்தும் செயற்படுகிறார்கள் என்பதைப் பாராட்டுகிறோம். முதலாவது அலையின் இறுதிப் பகுதியில் தனது கடமைகளைப் பொறுப்பேற்று வழங்கிய தலைமைத்துவத்துக்காக திரு. பிரசாந்த பர்னாந்து அவர்களை

பாராட்டுகிறோம். அவர் அனைவரையும் ஒன்று திரட்டி சாதனை படைத்தார். கடந்த 4 வருடங்களாக தலைவராக இருந்த திரு. தீப்தி லொகுஆரச்சி அவர்களுக்கும் அவர் வழங்கிய சேவைக்காக நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊழியர் படை, பணிப்பாளர் சபை அத்துடன் எமது முகவர்கள், தரகர்கள், வியாபார பங்காளர்கள் மற்றும் சனசமூகம் ஆகிய அனைவர்களினதும் முயற்சியின் பயனால் HNBA குழுமம் ஒரு கஷ்டமான வருடத்தை வெற்றிகரமாக கழித்தது. நீங்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து தொடர்ந்தும் வாடிக்கையாளர்களாக இருப்பதையும் பாராட்டுகிறோம். எமது இந்த நட்பை மேலும் வலுப்படுத்தி இந்தப் புதிய சூழ்நிலையில் முன்னோக்கிப் பயணிக்க எதிர்பார்க்கிறோம்.
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வழங்கிய உதவிக்காக அதற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, HNBA பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக செயலாற்றுகைக்கும் வளர்ச்சிக்கும் துணை புரிவதற்காக கவனமாக ஒரு சமநிலையைப் பேணுவதற்கு என்னுடன் சேர்ந்து உழைத்த பணிப்பாளர் சபையின் சக உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதான நிறைவேற்று அதிகாரியின் செய்தி

அன்புடைய பங்குதாரர்களே,

2020 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நாம் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்ததுடன் புதிய அணுகுமுறைகளையும் கையாண்டு எம்மை நோக்கி வந்த சவால்களையும் முறியடித்ததுடன் ரூபா 1,175 மில்லியன் இலாபத்தையும் ஈட்டியுள்ளோம் என்பதை HNB Assurance இன் தலைமைப் பதவியின் எனது முதல் செய்தியாக தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம். உறுதியான மனப்பாங்கும், துரிதமான செயற்பாடும் அத்துடன் டிஜிடல் முறைமைக்கு மாறியமை ஆகிய இந்த விடயங்களே எமது வெற்றிக்கு மூலகாரணமாகும். அனைத்து நேரங்களிலும் ஆபத்தில் உள்ள மக்கள் தொடர்பாக நாம் கரிசனையுடனும் இருந்தோம். ஒரு குழுவாக செயற்பட்டது இந்த புதிய மாற்றங்களை மேற்கொள்ளும் வேறு அனுகூலமாக அமைந்ததுடன் ஆரம்பத்தில் இருந்தே செயலாற்றுகையையும் உறுதி செய்தது.

**மக்களை முதன்மையாகக் கொள்ளல்**

முடக்க நிலை மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் ஆகியவற்றிற்கு மத்தியில் நாம் நம்பிக்கையுடன் செயற்பட்டு சவால்களை வெற்றி கொண்டு மொத்த தவணைக் கட்டணங்களின் வருமானத்தில் வளர்ச்சியைக் காட்டியுள்ளோம். எமது சேவை அத்தியாவசிய சேவையொன்றாக பிரகடனப்படுத்தப்பட்டதால் எமது அலுவலங்களை ஊரடங்குச் சட்டத்தின் போது திறந்து வைக்க நேரிட்டதுடன் உயர்ந்த அபாய மட்டம் இருக்கும் போதும் கடமைக்கு சமூகமளித்து பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்த காரணத்தால் எமது ஊழியப் படையை வலுப்படுத்துவது எமது முன்னுரிமையாக இருந்தது. ஊழியர்களுக்கான ஊதியம், பயன்கள் மற்றும் அவர்களின் தொழில்களுக்கான உத்தரவாதம் அவர்கள் மத்தியில் இருந்த ஆதங்கத்தை இல்லாமல் செய்ததுடன் டிஜிடல் முறைமையைப் பயன்படுத்தியதும் வீட்டில் இருந்து பணி புரிவதற்கான பயிற்சியையும் வசதிகளையும் வழங்கியமை எமது செயற்பாட்டை பலமாக முன்னெடுக்க இயலச் செய்தன. நாங்கள் தொடர்ந்தும் இரண்டு குழுக்களாக தொலைத் தொடர்பாடலைப் பயன்படுத்தி செயற்படுகிறோம்.

எமது அலுவலகங்கள் சுகாதார பாதுகாப்பு அடிப்படைகளுக்கு அமைய நெறிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை பற்றி விழிப்புணர்வூட்டுவதற்காக கிரமமாக ஞாபகப்படுத்தல்களையும் மேற்கொள்கிறோம். எமது வாடிக்கையாளர்கள் பாதுகாப்பாகவும், அச்சமின்றியும் எங்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முடியும் என்பதை நாம் உறுதி செய்ததுடன் எமது ஊழியர்களும் அதற்கமைய செயற்பட்டார்கள். எமது Call Centres வழமை போல் செயற்பட்டதுடன் அவற்றின் மூலம் மேலதிகமான சேவைகளையும் வழங்குகிறோம். வாடிக்கையாளர்களுக்கு 2020

ஜூன் மாதம் வரைக்கும் அவர்களின் கட்டணங்களைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தையும் முடக்க நிலையின் போது நாம் அவர்களுக்கு வழங்கினோம். ஒரு பரிபூரணமான அடிப்படையில் வாடிக்கையாளர்களின் கரிசனைகளுக்கு தீர்வுகளை வழங்கியதானது எமது அதிக வளர்ச்சிக்கு மூலகாரணமாக அமைந்தது. இதன் அடிப்படையில் "Supreme Health Max, Super Critical illness Covers மற்றும் Pay as You Claim" போன்ற காப்புறுதித் திட்டங்கள் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட புத்தாக்கங்களாகும். இந்த திட்டங்கள் மூலம் சந்தையில் அதிக வாய்ப்புக்கள் கிடைத்தன. கோவிட்-19 தொடர்பான காப்புறுதி பணக் கோரல்களுக்காக ரூபா 78 மில்லியன் வழங்கப்பட்டது. இவை ஆரம்பத்தில் காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

முடக்க காலத்தின் போது ஆலோசகர்களுக்கு அவர்கள் புதிய வாடிக்கையாளர்களை இணைத்துக் கொள்ளாத போதும் அவர்களின் தரகுப் பணத்தின் முற்பணங்களும் வழங்கப்பட்டன. இந்தக் காலப் பகுதியின் போது டிஜிடல் முறைமைக்கு மாறுவதற்கு தேவையான பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது இந்த வழிகளைப் பயன்படுத்தி இந்த ஆலோசகர்கள் புதிய வாடிக்கையாளர்களை இணைத்துக் கொள்கிறார்கள். வெளிக் குத்தகைப் பங்காளர்களும் (outsourced partners) எமது அலுவலகத்தில் தொழில் புரியும் அவர்களின் ஊழியர்களின் ஊதியங்களும் பயன்களும் தொடர்ந்தும் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. எமது சுகாதார மற்றும் பாதுகாப்பு திட்டங்களிலும் இவர்கள் உள்வாங்கப்பட்டார்கள். சனசமூக செயற்திட்டங்களையும் எந்த குறைபாடும் இன்றி நாம் இக்காலப் பகுதியில் நிறைவேற்றினோம்.

**நிலைமைக்கு ஏற்ப மாற்றங்களை மேற்கொண்டு செயற்படுதல்**

புதிய நிலைமையை வெற்றி கொள்வதற்கும் நிச்சயமற்ற தன்மையின் போது இசைவாக்கமடைந்து எமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்வது மிக அவசியமான தேவைப்பாடாகும். டிஜிடல் முறைமைக்கு மாறி எமது ஊழியர்களையும் புதிய முறைமைக்கு பழகச் செய்தோம். அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தெளிவாகப் புலப்பட்டன. வேலை முறைப் பட்டியல் அடிப்படையில் தொலைத் தொடர்புகளை மேற்கொள்வது. இணையவழியாக கூட்டங்களை நடாத்துவது போன்றன ஒரே நாளில் அறிமுகப்படுத்தப்பட்டன. வீட்டில் இருந்து பணி புரியும் போது ஊழியர்களின் பங்களிப்பை உயர்ந்த மட்டத்தில் வைத்திருப்பதற்காக எமது மனிதவள அபிவிருத்தி பிரிவால் மேற்கொண்ட பணி பாராட்டத்தக்கது.

நாங்கள் வியாபாரத்தையும் மக்கள் முன்னுரிமைகளையும் கவனமாக சமநிலைப்படுத்தி பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு தலைமைத்துவமும் காரணமாக இருந்தது. நிறைவேற்றுக் குழுவின் நாளாந்த கூட்டங்களும், கோவிட்-19 செயலணியும் எதிர்பாராத

தடங்கள்களில் இருந்து விலகி எமது தொலைநோக்குடன் உடன்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு பயணிப்பதற்கு இயலச் செய்தன. எண்ணக்கருக்களை யதார்த்தபூர்வமாக குறுகிய காலப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. எமது கூட்டு இலக்குகளை அடைந்து கொள்ளும் செயற்பாட்டின் போது எமது இணைய வழித் தொடர்பும் நேரடி ஒத்துழைப்பும் தொடர்ந்தும் மேம்பட்டது. பணிப்பாளர் சபையும், உபகுழுக்களும் அடிக்கடி கூட்டங்களைக் கூட்டி அதன் மூலம் பின்னூட்டல்களை வழங்கியும் எதிர்பாராத தடைகளை நீக்க துணை புரிந்ததும் நிலைமைகளை சீர் செய்தனர்.

**தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்**

நிலைத்திருப்பதும், வளர்ச்சியும் தொழில்நுட்பத்தில் தங்கியிருந்தது. எதிர்கால செயற்திட்டங்களுக்கான திட்டங்களை நாங்கள் ஏற்கனவே சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தோம். வாடிக்கையாளர்கள் டிஜிடல் முறைமைக்கு தங்களை பழக்கப்படுத்திக் கொள்வதற்கு ஆர்வத்துடன் இருந்த காரணத்தால் வளர்ச்சியை உந்தச் செய்யும் முக்கியமான செயற்திட்டங்களை அவசரமாக நடைமுறைப்படுத்த முடிந்தது. அதற்கமைவாக tab கணனியைப் பயன்படுத்தி எமது ஆலோசகர்கள் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தங்களை அனுப்பி வைத்தார்கள். இதனால் நேரம் சிக்கனப்படுத்தப்பட்டதுடன் காகிதாகிகள் குறைந்த அலுவலக சூழலையும் ஏற்படுத்த முடிந்தது.

எமது Call Centres மூலம் சீரான சேவையை வழங்குவதற்காக அவற்றின் செயற்பாட்டையும் மேம்படுத்தினோம். தொலைத் தொடர்பாடலின் போது முகம் கொடுக்கும் சவால்களுக்கு இசைவாக்கமடைந்து தகவல்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வாடிக்கையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு நாம் எம்மை பலப்படுத்திக் கொண்டோம்.

கணனி மயப்படுத்தப்பட்ட சூழலுக்கு எமது ஊழியர்களையும் முகவர்களையும் மாற்றுவதற்காக கணிசமான முதலீடுகளை மேற்கொண்டோம். மேசைக் கணனிகளைப் பயன்படுத்திய எமது ஊழியர்களுக்கு மடிக் கணனிகளும் wi-fi வசதிகளும் வழங்கப்பட்டு தொலைத் தொடர்புக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டன. குழுவின் தகவல்களை பாதுகாக்கவும் இணையவெளி அச்சுறுத்தல்களை வெற்றி கொள்வதற்காகவும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான முதலீடுகள் புதிய சூழலை உருவாக்கியுள்ளதுடன் எதிர்காலத்தில் பயன்களை அதிகமாக தரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**நிச்சயமற்ற தன்மையிலும் செயலாற்றுகை**

ஒரு சவாலான வியாபார சூழ்நிலையிலும்; HNB Assurance Group மொத்த தவணைக் கட்டணங்களாக ரூபா 10.4 பில்லியனை ஈட்டி 5% வளர்ச்சியுடன் 2020 ஆம் ஆண்டில்

சாதனை படைத்துள்ளது. வட்டி வீதங்கள் குறைவடைந்த போதும் வட்டி வருமானம் 11% அதிகரித்து குறித்த வருடத்தில் ரூபா 2.5 பில்லியனைப் பெற்றுத் தந்தது. தேறிய வருமானம் ரூபா 11.6 பில்லியனாகும். இது 6% வளர்ச்சியாகும். குறைவடையும் வட்டி வீதத்தால் ஆயுள் காப்புறுதி நிதியின் ஒப்பந்தப் பொறுப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களில் ஏற்பட்ட 19% அதிகரிப்பும் ஏனைய நிர்வாக செலவுகளில் ஏற்பட்ட 9% அதிகரிப்பும் இலாபத்தின் அளவை குறைத்தது.

வியாபார வளர்ச்சி காரணமாக நிதியியல் முதலீடுகள் 24% அதிகரித்து ரூபா 26.4 பில்லியனை ஈட்டியதனால் மொத்த சொத்துக்கள் 19% அதிகரித்து ரூபா 31.7 பில்லியனைத் தந்தது. வருட முடிவின் போது ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி ஒப்பந்தங்களின் பொறுப்புகள் முறையே 18% மற்றும் 15% அதிகரித்து ரூபா 17.1 மற்றும் ரூபா 3.3 பில்லியன் என்றவாறு காணப்பட்டதால் பொறுப்புகள் 18% அதிகரித்து ரூபா 23.5 பில்லியனாக காணப்பட்டது. நாங்கள் வளர்ச்சியையும் ஸ்திரத்தன்மையையும் கவனமாக சமநிலைப்படுத்தியதன் விளைவாகவும் அறிவார்ந்த முகாமைத்துவம் மூலமாகவும் 2019 இல் 309% இல் இருந்து 338% ஆயுள் காப்புறுதி நிதிக்கும் 2019 இல் 223% இல் இருந்து 256% பொதுக் காப்புறுதி நிதிக்கும் மூலதன போதுமை விகிதம் (Capital Adequacy Ratio) வருட இறுதியில் மேம்பட்டது. பல நிறுவனங்களின் வீழ்ச்சி ஏற்பட்ட வருடம் ஒன்றில் A(lka) தரத்தில் நாம் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

**பங்குதாரர்களுக்கு பெறுமதி**

2020 ஆம் ஆண்டின் இறுதியில் HNB Assurance PLC இன் மொத்த பங்குகளின் பெறுமதி 27% அதிகரித்து ரூபா 8.7 பில்லியனை எட்டியுள்ளது என்பதை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதனால் பங்குதாரர்களுக்கு ரூபா 1.8 பில்லியன் பெறுமதி சேர்ந்துள்ளது. 2020 நவம்பர் 3:1 என்ற விகிதாசாரத்தில் பங்குகளை பிரித்ததானது 10.5% அதிக வளர்ச்சியை அடைவதற்கான பிரதான காரணியாக அமைந்தது. இது பங்குகளுக்குத் தேவையான கேள்வியை பங்குச் சந்தையில் உருவாக்கியது. சபையானது பங்கொன்றுக்கான இடைக்கால மற்றும் இறுதியான பங்கிலாபமாக ரூபா 2.80ஐ பிரகடனப்படுத்தியுள்ளதுடன் எதிர்வருகின்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களால் அது அனுமதிக்கப்படவுமுள்ளது. இந்த விடயமானது 5% பங்கிலாப விளைவை பெற்றுக் கொடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**எமது எதிர்காலத்தை வடிவமைத்தல்**

நாம் அனைவரும் எதிர்பார்த்திருந்த தடுப்பூசி உலகின் அனைத்துப் பாகங்களையும் அடைந்து வருகிறது. எனினும் புதிய கோவிட் வைரஸ் மற்றும் அதன் பாதிப்பும் உலகம் சாதாரண நிலைமைக்கு வேகமாக மாறும் என்ற நம்பிக்கையை நலிவடையச் செய்துள்ளது. என்றாலும் 2020 இல் ஏற்பட்ட சடுதியான மாற்றங்கள் நாங்கள் ஆரம்பத்தில் தயார் நிலையில் இருக்காத அவசர நிலைமைகளுக்கு எங்களை தயார்படுத்தியது. எமது மனப்பாங்கும் புதிய நிலைமைக்கு ஏற்றவாறு இசைவாக்கமடைந்ததுடன் வாடிக்கையாளர்களும் வியாபார பங்காளர்களும் இந்த மாற்றத்துடன் சேர்ந்து கொண்டார்கள். நாங்கள் தொடர்ந்தும் இடர் நேர்வுகளை மதிப்பிட்டு எமது வியாபார சூழலில் உருவாகி வருகின்ற சவால்களை முகாமை செய்வதற்காக அழுத்தச் சோதனையின் நோக்கெல்லையை விஸ்தரிப்போம். அனைத்து நெருக்கடிகளிலும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. எமது வளர்ச்சிக்கு முக்கியமாக உள்ளூர் வலையமைப்பும் எமது தாய் நிறுவனமும் இருந்ததுடன் எமது குழு இணைச் செயற்பாடுகளை ஊக்குவிக்க நெருக்கமாக இருந்தும் செயற்பட்டோம். எதிர்காலத்திலும் இந்த விடயம் பிரதான இடத்தில் காணப்படும்.

கடந்த வருடம் மாற்றங்களுக்கு புத்தாக்கத்துடனும் பலத்துடனும் முகம் கொடுப்பதற்கு எமது நோக்கையும் புத்திக் கூர்மையையும் அதிகரித்தது. புத்தாக்கங்களுடன் கூடிய மாற்றங்கள் எமது இந்த எதிர்காலத்தை நோக்கிய பயணத்திற்கு துணை புரியக் கூடியன. மக்களுக்கான எமது சேவைக்காக டிஜிடல் முறைமை மிகப் பிரதான வகிபாகத்தை வகிப்பதுடன் மக்கள் கரிசனையை முதன்மையாகக் கொண்ட எமது சேவை உறுதியான தாக்குப் பிடிக்கக்கூடிய எமது காப்புறுதிக் குழுமத்தின் அபிலாசைகளை முன்னெடுக்க உதவும்.

**ஒப்புகை**

பணி நிறைவேற்றுகையை தனது நோக்காகக் கொண்டு சிறந்த நிறுவனம் ஒன்றை உருவாக்குவதற்காக நிருவாகத்தையும் கட்டுப்பாட்டையும் உறுதியான கட்டமைப்புக்குள் கொண்டிருக்கின்ற பின்னணியுடன் ஒன்றாகப் பயணிக்கும் சாதக மனப்பாங்கும் திறமையும் நிறைந்துள்ள ஓர் இளம் குழுவுக்கு தலைமை வகிக்க கிடைத்ததை நான் பெறுமிதமாகக் கருதுகிறேன். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற செயலாற்றுகைக்குப் பின்னால் உள்ள அவர்களின் முயற்சியையும் கருத்துகளையும் நான் பாராட்டுகிறேன். தீர்மானங்கள் மேற்கொள்வது துரிதமாக இருந்ததனாலும் வளங்களின் ஒதுக்கீடு உச்ச பயன்பாடு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாலும் சபை அங்கத்தவர்களுக்கான அதிகரிக்கப்பட்ட அணுகலும் மற்றும் HNB Group நடவடிக்கைகள் மீதான அவர்களின் அதிகமான மேற்பார்வையும் ஒரேயளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்த குழுமத்தின் நிறைவேற்று அதிகாரியாக

நான் இருந்த ஆரம்ப வருடங்களில் அவர்களின் வழிகாட்டல்கள் பெறுமதிமிக்கனவாக இருந்தன.

தமது இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்காக எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள எமது வாடிக்கையாளர்களுக்கும் நான் நன்றிகளை தெரிவிப்பதுடன் பல கோணங்களிலும் அவர்களுக்கு எதிர்காலத்தில் தீர்வுகளை வழங்கவும் எதிர்பார்க்கிறேன். எமது வியாபார பங்காளர்களின் கூட்டு முயற்சியும் எமது பயணத்திற்கு பாரிய பங்களித்துள்ளது. அதற்காக அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன். எமது தாய் நிறுவனமான ஹட்டன் நெஷனல் வங்கிக்கும் எமது பங்குதாரர்களுக்கும் அவர்கள் HNB Assurance மீது வைத்த நம்பிக்கைக்காக நன்றி தெரிவிக்கின்றேன். தொடர்ந்தும் அவர்கள் எம்மீது நம்பிக்கை வைப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

## HNB ASSURANCE PLC
## நிதி நிலைமைக் கூற்று

| *31ஆம் திகதி மார்கழி 2020 உள்ளபடியான* | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020 | 2019 | 2020 | 2019 |
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | **169,788** | 162,371 | **116,740** | 111,202 |
| *சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை* | **394,437** | 343,737 | **380,105** | 325,572 |
| அருவச் சொத்துக்கள் | **68,858** | 51,787 | **62,240** | 49,830 |
| பிற்போட்ட வரி சொத்து | **738,721** | 1,009,711 | **725,255** | 1,000,673 |
| முதலீட்டு நிதி | **26,366,608** | 21,202,074 | **22,075,265** | 17,777,410 |
| உப நிறுவனத்தின் மீதான முதலீடுகள் | **-** | - | **1,150,000** | 1,150,000 |
| ஆயுட்காப்புறுதிதாரருக்கான கடன்கள் | **379,736** | 325,307 | **379,736** | 325,307 |
| மீள் காப்புறுதி நிலுவைகள் | **771,776** | 645,411 | **172,699** | 144,715 |
| கட்டுப்பண நிலுவைகள் | **1,111,594** | 946,650 | **4,988** | 9,458 |
| ஏனைய சொத்துக்கள் | **864,414** | 933,633 | **582,321** | 625,499 |
| காப்புறுதி கோட்பாட்டு - பிற்போடப்பட்ட செலவுகள் | **163,619** | 138,622 | **-** | - |
| காசும் காசுக்கு சமனானவையும் | **711,111** | 865,843 | **393,522** | 632,712 |
| **மொத்த சொத்துக்கள்** | **31,740,662** | **26,625,146** | **26,042,871** | **22,152,378** |
| | | | | |
| **பங்குதாரர் உரிமைகளும் பொறுப்புக்களும்** | | | | |
| **நிறுவன பங்குதாரர்களுக்கு உரித்தாகக்கூடிய மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | **1,171,875** | 1,171,875 | **1,171,875** | 1,171,875 |
| வருமான ஒதுக்கீடுகள் | **5,841,032** | 4,965,809 | **4,968,314** | 4,544,369 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | **93,754** | 24,801 | **15,626** | 9,881 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | **(51,520)** | (6,525) | **(33,916)** | (6,514) |
| ஆயுட்காப்புறுதிதாரருக்கான ஒதுக்கப்பட்ட நிதியம் | **757,933** | 177,228 | **757,933** | 177,228 |
| வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு ஒதுக்கம் | **381,156** | 381,156 | **381,156** | 381,156 |
| **நிறுவன பங்குதாரர்களுக்கு உரித்தாகக்கூடிய மூலதனமும் ஒதுக்கங்களும்** | **8,194,230** | **6,714,344** | **7,260,988** | **6,277,995** |
| கட்டுப்பாட்டில் அல்லா பங்குகளின் நலம் | - | - | - | - |
| **மொத்த பங்குதாரர் உரிமைகள்** | **8,194,230** | **6,714,344** | **7,260,988** | **6,277,995** |
| | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | |
| ஆயுள் காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் | **17,064,089** | 14,464,534 | **17,064,089** | 14,464,534 |
| பொது காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் | **3,309,149** | 2,871,416 | **-** | **-** |
| ஊழியர் பணிக்கொடுப்பனவு பொறுப்புக்கள் | **254,438** | 167,118 | **150,729** | 100,076 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | **151,093** | 112,031 | **12,301** | 16,175 |
| மீள் காப்புறுதி கடன் கொடுநர் | **700,105** | 540,652 | **290,916** | 125,151 |
| *குத்தகை கடன் வழங்குநர்கள்* | **393,145** | 350,089 | **377,746** | 334,832 |
| ஏனைய பொறுப்புக்கள் | **1,550,108** | 1,274,326 | **832,198** | 802,565 |
| வங்கி மேலதிக பற்று | **124,305** | **130,636** | **53,904** | 31,050 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 23,546,432 | **19,910,802** | 18,781,883 | **15,874,383** |
| **மொத்த பங்குதாரர் உரிமைகளும் பொறுப்புக்களும்** | **31,740,662** | **26,625,146** | **26,042,871** | **22,152,378** |

# HNB ASSURANCE PLC

## இலாபம் அல்லது நட்டம் மற்றும் முழுமையான பிறவருமான கூற்று

| *31ஆம் திகதி மார்கழி 2020 உள்ளபடியான* | குழுமம் | | கம்பனி | | மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2019 | 2020 | 2019 | குழுமம் | கம்பனி |
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | % | % |
| மொத்த விண்ணப்பக் கணிப்பு கட்டுப்பணம் | **10,398,992** | 9,942,757 | **5,487,039** | 5,175,044 | 5 | 6 |
| மீள்காப்புறுதிதாரர்களுக்காக செலுத்தப்பட்ட கட்டுப்பணம் | **(1,307,978)** | (1,312,881) | **(265,164)** | (240,974) | (0.37) | 10 |
| நிகர விண்ணப்பக் கணிப்பு கட்டுப்பணம் | **9,091,014** | 8,629,876 | **5,221,875** | 4,934,070 | 5 | 6 |
| ஈட்டப்படாத கட்டுப்பணத்திற்கான ஒதுக்கீட்டின் நிகர மாற்றம் | **(164,257)** | (156,216) | | - | 5 | - |
| **ஈட்டிய நிகர கட்டுப்பணம்** | **8,926,757** | **8,473,660** | **5,221,875** | **4,934,070** | 5 | 6 |
| | - | | | | | |
| **ஏனைய வருமானம்** | | | | | | |
| வட்டி மற்றும் பங்குலாபம் | **2,493,317** | 2,248,926 | **2,125,362** | 1,949,467 | 11 | 9 |
| தேறிய தேறத்தக்க இலாபம்/(நட்டம்) | **53,634** | 92,856 | **44,909** | 70,000 | (42) | (36) |
| நியம பெறுமதிகளின் தேறிய இலாபம்/ (நட்டம்) | **17,696** | (8,826) | **12,987** | (6,370) | 300 | 304 |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | **140,843** | 121,510 | **34,945** | 92,215 | 16 | (18) |
| ஏனைய வருமானம் | **14,970** | 16,196 | **5,747** | 2,965 | (8) | 94 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **2,720,460** | **2,470,662** | **2,223,950** | **2,108,277** | **10** | **8** |
| **தேறிய வருமானம்** | **11,647,217** | **10,944,322** | **7,445,825** | **7,042,347** | **6** | **6** |
| **தேறிய உரிமை கொடுப்பனவுகள்** | | | | | | |
| தேறிய காப்புறுதி நன்மைகளும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் | **(3,398,239)** | (3,524,768) | **(1,428,349)** | (1,325,145) | (4) | 8 |
| செலுத்தப்பட வேண்டிய காப்புறுதி ஈடுகளின் தேறிய மாற்றம் | **(160,402)** | (96,007) | **(65,832)** | (12,870) | 67 | 412 |
| ஆயுள் காப்புறுதி கோட்பாட்டு நிதியத்தில் ஏற்பட்ட மாற்றம் | **(2,576,169)** | (2,173,251) | **(2,576,169)** | (2,173,251) | 19 | 19 |
| பங்குதாரர்களிற்கான மிகை இலாப ஒதுக்கத்தில் ஏற்பட்ட மாற்றம் | - | - | - | - | | |
| ஏனைய செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவுகள் | **(2,546,209)** | (2,336,042) | **(1,430,742)** | (1,342,591) | 9 | 7 |
| விண்ணப்பக்கணிப்பு மற்றும் நிகரக் கொள்வனவுச் செலவு | **(1,235,446)** | (1,288,068) | **(888,527)** | (959,550) | (4) | (7) |
| காப்புறுதி தொடர்பான வேறு செலவுகள் | **(100,256)** | (121,295) | (56,843) | (72,923) | (17) | (22) |
| **மொத்த நன்மைகள், இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவுகள்** | **(10,016,721)** | **(9,539,431)** | **(6,446,462)** | **(5,886,330)** | **5** | **10** |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **1,630,496** | **1,580,654** | **999,363** | 1,106,535 | 16 | (10) |
| வருமான வரிச் செலவுகள் | **(455,273)** | (394,663) | **(275,418)** | (279,826) | 15 | (2) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **1,175,223** | **1,010,228** | **723,945** | 826,709 | 16 | (12) |
| **முழுமையான பிறவருமானம்** | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | **709,787** | 511,043 | **631,105** | 456,276 | 39 | 38 |
| - வருமான கூற்றுக்கு மாற்றப்பட்ட தேறப்பட்ட (வருமானங்களும்) இழப்புக்களும் | **(53,106)** | (92,836) | **(44,655)** | (68,751) | (43) | (35) |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் | **(580,705)** | (379,095) | (580,705) | (379,095) | 53 | 53 |
| தொடர்பான வரி | **(7,023)** | (6,286) | | | 12 | - |
| வரையறுத்த நன்மை திட்டத்தின் மூலமான கணிப்பீட்டு வருவாய்/ (நட்டம்) | **(44,995)** | (2,119) | **(27,402)** | (2,119) | 2,023 | 1,193 |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம் | **23,958** | **30,707** | **(21,657)** | **6,311** | (22) | (443) |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | **1,199,181** | **1,040,935** | **702,288** | **833,020** | 15 | (16) |
| **ஒதுக்கப்பட்ட இலாபமாக;** | | | | | | |
| நிறுவன உரிமையாளர்களுக்காக | 1,175,223 | 1,010,228 | **723,945** | 826,709 | 16 | (12) |
| கட்டுபாட்டில் அல்லா உரிமையாளர்களுக்காக | | - | - | - | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | **1,175,223** | **1,010,228** | **723,945** | **826,709** | 16 | (12) |
| **ஒதுக்கப்பட்ட மொத்த முழுமையான பிறவருமானம்** | | | | | | |
| நிறுவன உரிமையாளர்களுக்காக | 1,199,181 | 1,040,935 | 702,288 | 833,020 | 15 | (16) |
| கட்டுபாட்டில் அல்லா உரிமையாளர்களுக்காக | | - | - | - | - | - |
| **ஒதுக்கப்பட்ட மொத்த முழுமையான பிறவருமானம்** | **1,199,181** | **1,040,935** | **702,288** | **833,020** | 15 | (16) |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | | | | | | |
| - பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூ.) | **7.83** | 6.73* | **4.83** | 5.51* | 16 | (12) |
| - பங்கொன்றிற்கான நீர்த்த உழைப்பு (ரூ.) | **2.80** | 8.00 | | | | |

*'2019 ஆம் ஆண்டின் அடிப்படை மற்றும் நீர்த்த வருவாய் கள் 31 டிசம்பர் 2020 இல் உள்ள படி, பிந்தைய துணைப்பிரிவின் சராசரி யான சராசரி யான பங்குகளின் அடிப்படையில் மறுசீரமைக்கப்பட்டன.*

Type your text

# HNB ASSURANCE PLC

## உரிமைமாற்றல் கூற்று - குழுமம்

*31ஆம் திகதி மார்கழி 2020 முடிவடைந்த ஆண்டிற்கான*

| | கூறப்பட்ட மூலதனம் | வருமான ஒதுக்கீடுகள் | விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | ஏனைய ஒதுக்கீடுகள் | ஆயுட்காப்புறுதிதாரருக்கான ஒதுக்கப்பட்ட நிதியம் | வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு ஒதுக்கம் | மொத்த பங்குதாரர் உரிமைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **01.01.2019 உள்ளபடி நிலுவை** | 1,171,875 | 4,405,581 | (8,025) | (4,406) | (201,867) | 381,156 | 5,744,314 |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானங்கள் | | | | | | | |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | 1,010,228 | - | - | - | | 1,010,228 |
| ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள் | | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | - | - | 411,921 | | - | - | 411,921 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாற்றபட்டது | - | - | (379,095) | | - | - | (379,095) |
| வரையறுத்த நன்மை திட்டத்தின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | - | - | | (2,119) | - | - | (2,119) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம் | - | - | 32,826 | (2,119) | - | | 30,707 |
| **ஆண்டிற்கான மொத்த முழமையான வருமானம்** | - | 1,010,228 | 32,826 | (2,119) | - | - | 1,040,935 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாற்றபட்டது | - | - | - | - | 379,095 | | 379,095 |
| | | | | | | | - |
| **உரிமையாளர்களின் உரிமையில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 2018 ஆம் ஆண்டிற்கான | - | (350,000) | - | - | - | - | (350,000) |
| 2019 *க்கான இடைக்கால* பங்கிலாபம் | | (100,000) | | | | | (100,000) |
| **31.12.2019 உள்ளபடியான நிலுவை** | 1,171,875 | 4,965,809 | 24,801 | (6,525) | 177,228 | 381,156 | 6,714,344 |
| **01.01.2019 உள்ளபடி நிலுவை** | 1,171,875 | 4,965,809 | 24,801 | (6,525) | 177,228 | 381,156 | 6,714,344 |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானங்கள்** | | | | | | | |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | 1,175,223 | - | - | - | | 1,175,223 |
| ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள் | | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | - | - | 649,658 | - | - | - | 649,658 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாற்றபட்டது | - | - | (580,705) | - | - | - | (580,705) |
| வரையறுத்த நன்மை திட்டத்தின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | | | | (44,995) | - | - | (44,995) |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம்** | - | - | 68,953 | (44,995) | - | - | 23,958 |
| **ஆண்டிற்கான மொத்த முழமையான வருமானம்** | - | 1,175,223 | 68,953 | (44,995) | - | - | 1,199,181 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாற்றபட்டது | - | - | - | - | 580,705 | - | 580,705 |
| **உரிமையாளர்களின் உரிமையில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 2019 ஆம்ஆண்டிற்கான | - | (300,000) | - | - | - | - | (300,000) |
| **31.12.2020 உள்ளபடியான நிலுவை** | 1,171,875 | 5,841,032 | 93,754 | (51,520) | 757,933 | 381,156 | 8,194,230 |

**31 *டிசம்பர்* 2020 *நிலவரப்படி* 150 *மில்லியன் சாதாரண பங்குகளை குறிப்பிடப்பட்ட மூலதனம் குறிக்கிறது*. (2019 - 50 *மில்லியன் சாதாரண பங்குகள்*)**

## HNB ASSURANCE PLC

## உரிமைமாற்றல் கூற்று - கம்பனி

*31ஆம் திகதி மார்கழி 2020 முடிவடைந்த ஆண்டிற்கான*

| | கூறப்பட்ட மூலதனம் | வருமான ஒதுக்கீடுகள் | விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | ஏனைய ஒதுக்கீடுகள் | ஆயுட்காப்புறுதிதாரருக்கான ஒதுக்கப்பட்ட நிதியம் | வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு ஒதுக்கம் | மொத்த பங்குதாரர் உரிமைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | **ரூ.'000** | **ரூ.'000** | | | **ரூ.'000** | | |
| **01.01.2019 உள்ளபடி நிலுவை** | 1,171,875 | 4,167,660 | 1,451 | (4,395) | (201,867) | 381,156 | 5,515,880 |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானங்கள் | | | | | | | |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | 826,709 | | - | - | | 826,709 |
| | | | - | | | | |
| ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள் | | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | | | **387,525** | | | | 387,525 |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் | | | **(379,095)** | | | | (379,095) |
| வரையறுத்த நன்மை திட்டத்தின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | | | | (2,119) | | | (2,119) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம் | | | **8,430** | | | | 6,311 |
| **ஆண்டிற்கான வருமானம்** | - | 826,709 | 8430 | (2,119) | - | **393,522** | 833,020 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாற்றப்பட்டது | | | | | | | |
| **உரிமையாளர்களின் உரிமையில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 2017 ஆம்ஆண்டிற்கான | | (350,000) | | | | | |
| 2019 *க்கான இடைக்கால ஈவுத்தொகை* | | (100,000) | | | | | |
| **31.12.2019 உள்ளபடியான நிலுவை** | 1,171,875 | 4,544,369 | **9,881** | (6,514) | 177,228 | **381,156** | 6,277,995 |
| | | | | | | | |
| **01.01.2010 உள்ளபடி நிலுவை** | **1,171,875** | **4,544,369** | **9,881** | **(6,514)** | **177,228** | **381,156** | **6,277,995** |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானங்கள்** | | | | | | | |
| **ஆண்டிற்கான இலாபம்** | **-** | **723,945** | **-** | **-** | **-** | | **723,945** |
| ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள் | | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | | | **586,450** | | | | 586,450 |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் - ஆயுள் நிதி | | | **(580,705)** | | | | (580,705) |
| வரையறுத்த நன்மை திட்டத்தின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | | | | **(27,402)** | | | (27,402) |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம்** | | | **5,745** | **(27,402)** | | | **(21,657)** |
| **ஆண்டிற்கான வருமானம்** | | **723,945** | **5,745** | **(27,402)** | | | **702,288** |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாற்றப்பட்டது | | | | | | | |
| **உரிமையாளர்களின் உரிமையில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | |
| *இடைக்கால* பங்கிலாபம்- 2019 | | **(300,000)** | | | | | |
| **31.12.2019 உள்ளபடியான நிலுவை** | **1,171,875** | **4,968,314** | **15,626** | **(33,916)** | **757,933** | **381,156** | **7,260,988** |

# HNB ASSURANCE PLC

## காசுப்பாய்ச்சல் கூற்று

| *31ஆம் திகதி மார்கழி 2020 உள்ளபடியான* | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2020 | 2019 | 2020 | 2019 |
| | | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | | |
| வரிகளுக்கு முந்திய இலாபம் | | **1,630,496** | 1,404,891 | **999,363** | 1,106,535 |
| *சீராக்கங்கள்* | | | | | |
| வட்டி வருமானம் | | **(2,487,950)** | (2,243,284) | **(2,120,053)** | (1,884,977) |
| பங்கு வருமானம் | | **(5,367)** | (5,642) | **(5,309)** | (64,490) |
| அருவச்சொத்து அழிப்புக்கள் | | **19,632** | 18,885 | **19,147** | 18,469 |
| பெறுமானத்தேய்வு | | **54,000** | 47,319 | **38,287** | 32,593 |
| *பயன்பாட்டு உரிமைகளின் நிகர தேய்மானம்* | | **143,891** | 139,525 | **128,491** | 126,628 |
| *குத்தகை கடனாளியின் வட்டி செலவு* | | **44,846** | 53,710 | **42,264** | 51,699 |
| ஊழியர் நன்மை நிதி ஏற்பாடு | | **47,312** | 37,136 | **26,945** | 21,656 |
| தேறிய தேறத்தக்க இலாபம் | | **(53,634)** | (92,856) | **(44,909)** | (70,000) |
| நியமப் பெறுமதியின் தேறிய இழப்புக்கள் | | **(17,696)** | 8,826 | **(12,987)** | 6,370 |
| *பயன்பாட்டு உரிமை சொத்துக்களை விற்பனை செய்வதில் ஆதாயம்* | | **(234)** | - | **(3,242)** | 403 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனையில் ஏற்பட்ட நட்டம் / இலாபம் | | **(3,339)** | (4,283) | **(475)** | |
| | | **(628,043)** | **(635,773)** | **(932,478)** | **(655,114)** |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம் | (அ) | **(362,064)** | (558,137) | **(48,747)** | (219,553) |
| தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றம் | (ஆ) | **3,447,285** | 2,898,914 | **2,791,079** | 2,380,061 |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்சல்** | | **2,457,178** | **1,705,004** | **1,809,854** | **1,505,394** |
| வழங்கப்பட்ட பணிக் கொடுப்பனவு | | **(4,987)** | (12,493) | **(3,694)** | (8,539) |
| வருமான வரிக் கொடுப்பனவு | | **(73,109)** | | | |
| பொருளாதார சேவைக்கட்டண கொடுப்பனவு | | **(6,137)** | (22,205) | | |
| அதி ஈட்ட வரிக் கொடுப்பனவு | | **-** | | | |
| *நிறுவனங்களுக்கு இடையேயான ஈவுத்தொகை மீதான வரி நிறுத்துதல்* | | | (9,575) | | |
| *மூலதன ஆதாய வரி செலுத்தப்பட்டது* | | **(1,213)** | (814) | | |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்சல்** | **(1)** | **2,371,732** | **1,659,917** | **1,806,160** | **1,496,855** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்சல்** | | | | | |
| முதலீட்டு பங்குகளின் தேறிய கொள்வனவு | | **(161,539,857)** | (135,558,700) | **(112,016,270)** | (97,671,001) |
| *நிதி முதலீடுகளின் முதிர்ச்சியிலிருந்து கிடைக்கும் வருமானம்* | | **156,827,276** | 130,618,738 | **108,179,859** | 93,759,085 |
| *நிதி முதலீடுகளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானம்* | | **391,770** | 1,684,919 | **301,267** | 1,173,551 |
| பெற்ற வட்டி | | **2,372,238** | 2,377,621 | **2,001,689** | 1,976,793 |
| பெற்ற பங்கிலாபம் | | **5,367** | 5,933 | **5,309** | 64,750 |
| அருவச் சொத்து கொள்வனவு | | **(36,703)** | (9,585) | **(31,557)** | (9,517) |
| ஆதனம், பொறி உபகரணம் கொள்வனவு | | **(77,408)** | (59,965) | **(59,114)** | (40,469) |
| ஆதனம், பொறி உபகரணம் அகற்றல் பெறுவனவு | | **19,330** | 6,117 | **18,531** | 758 |
| *பயன்பாட்டு சொத்துக்கான உரிமைக்கு முன்கூட்டியே செலுத்தப்பட்டது* | | **(20,829)** | (30,363) | **(20,829)** | (22,587) |
| **முதலீட்டு செயற்பாட்டிற்கான பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(2)** | **(2,058,816)** | **(965,285)** | **(1,621,115)** | **(768,637)** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலான காசுப் பாய்ச்ல்** | | | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | (300,000) | (450,000) | **(300,000)** | (450,000) |
| *குத்தகை கடன்களை செலுத்துதல்* | | **(161,317)** | (148,520) | **(147,089)** | (136,481) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலான தேறிய காசு** | **(3)** | **(461,317)** | **(598,520)** | **(447,089)** | **(586,481)** |
| **தேறிய காசு மற்றும் காசுக்கு சமனானவையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு (1+2+3)** | | (148,401) | **96,112** | **(262,044)** | **141,737** |
| வருட ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கு சமனானவை | | **735,207** | 639,095 | **601,662** | 459,925 |
| **வருட முடிவிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமனானவை** | | **586,806** | **735,207** | **339,618** | **601,662** |
| **காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்** | | | | | |
| **(அ) தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம்** | | | | | |
| பிற்போடப்பட்ட கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு | | **(24,997)** | 1,864 | | |
| ஆயள்காப்புறுதிதாரருக்கான கடன் அதிகரிப்பு | | **(54,429)** | (82,194) | **(54,429)** | (82,194) |
| மீள்காப்புறுதி நிலுவைகள் அதிகரிப்பு | | **(126,365)** | (229,638) | **(27,984)** | (68,789) |
| கட்டுப்பண நிலுவைகளின் அதிகரிப்பு | | **(164,944)** | (148,437) | **4,470** | (1,412) |
| ஏனைய சொத்துக்களின் அதிகரிப்பு | | **8,671** | (99,732) | **29,196** | (67,158) |
| **தேறிய தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம்** | | **(362,064)** | **(558,137)** | **(48,747)** | **(219,553)** |
| **(ஆ) தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றம்** | | | | | |
| ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு | | **254,418** | 177,265 | **29,633** | 166,649 |
| காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் அதிகரிப்பு - ஆயுள் காப்புறுதி | | **2,595,681** | 2,204,529 | **2,595,681** | 2,204,529 |
| காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் அதிகரிப்பு - பொது காப்புறுதி | | **437,733** | 346,321 | **-** | - |
| மீள் காப்புறுதி கடன் கொடுநரின் அதிகரிப்பு | | **159,453** | 170,799 | **165,765** | 8,883 |
| **தேறிய தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றம்** | | **3,447,285** | **2,898,914** | **2,791,079** | **2,380,061** |